**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No.147/2025**
**LW- 6 Examined as PW - 3**

| | |
|---|---|
| Name: பையாஸ் | Age: |
| Father's Name: முகமத்ரஷித்<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 24.02.2026 | |

**24.02.2026**

**எதிரிகள் ஆஜர்**

**விசாரணை தொடங்கிய நேரம் 12.20 PM.**

**அ.சா.3 – முதல் விசாரணை**

நான் சாலவாக்கத்தில் குடியிருந்து நடராஜபுரத்தில் தனியார் கம்பனியில் வேலை செய்கிறேன். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்ற ஆஜர் எதிரிகள் யார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றில் உள்ள இரண்டாவது என்னுடையதுதான். மேற்படி கையொப்பங்களை போலிசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன். மேற்படி ஆவணங்களில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள இரண்டாவது கையொப்பங்கள் என்னுடையது அவைகள் முறைவே அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அரசு உதவி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு வழக்கிற்குரிய அனைத்து ஆவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் அரசு தரப்பில் சாட்சியை

பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி வழங்கப்பட்டு மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 13.07.2024 ம் தேதி மாலை 7.30 மணிக்கு நானும் பையாஸ் என்பவரும் சாலவாக்கம் சந்தை அருகே இருந்தபோது சாலவாக்கம் போலிசார் இவ்வழக்கின் எதிரிகள் அஜித் மற்றும் திவாகர் ஆகியோரை கைது செய்து மேற்படி எதிரிகள் தாமான முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் இருவர் முன்னிலையிலும் பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் 21.00 மணிக்கு எதிரி திவாகர் என்பவர் அடையாம் காட்டி எடுத்து ஆஜர் செய்த 1. பணம் ரூபாய் 1000/-, 2. டிஎன் 02 பிஎக்ஸ் 6834 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் மற்றும் 3. சுமார் 85 செ.மீ நீளம்கொண்ட  இரும்பு கம்பி ஒன்றை ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினர்கள் என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டுதற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**
**விசாரணை முடிக்கப்பட்ட நேரம்** 12.20 PM

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No.147/2025**
**LW- 5 Examined as PW - 2**

| | |
|---|---|
| Name: **யுவராஜ்** | Age: |
| Father's Name: **ராமலிங்கம்**<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 24.02.2026 | |

**24.02.2026**

**எதிரிகள் ஆஜர்**

**விசாரணை தொடங்கிய நேரம் 12.05 PM.**

**அ.சா.2 – முதல் விசாரணை**

நான் செங்கல்பட்டில் ஆட்டோ ஓட்டுனராக இருந்து வருகிறேன். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்ற ஆஜர் எதிரிகள் யார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பங்களை போலிசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன். மேற்படி ஆவணங்களில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதல் கையொப்பங்கள் என்னுடையது அவைகள் முறைவே அ.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அரசு உதவி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு வழக்கிற்குரிய அனைத்து ஆவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி வழங்கப்பட்டு மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய

அனுமதிக்கப்படுகிறது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 13.07.2024 ம் தேதி மாலை 7.30 மணிக்கு நானும் பையாஸ் என்பவரும் சாலவாக்கம் சந்தை அருகே இருந்தபோது சாலவாக்கம் போலிசார் இவ்வழக்கின் எதிரிகள் அஜித் மற்றும் திவாகர் ஆகியோரை கைது செய்து மேற்படி எதிரிகள் தாமான முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் இருவர் முன்னிலையிலும் பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் 21.00 மணிக்கு எதிரி திவாகர் என்பவர் அடையாம் காட்டி எடுத்து ஆஜர் செய்த 1. பணம் ரூபாய் 1000/-, 2. டிஎன் 02 பிஎக்ஸ் 6834 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் மற்றும் 3. சுமார் 85 செ.மீ நீளம்கொண்ட இரும்பு கம்பி ஒன்றை ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினர்கள் என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டுதற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.20 PM

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**